**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 128/2021**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சமீமா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜலில் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரிகள் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக நுண்கதிர் பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். 29.10.2016 ம் தேதி, தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, மாலை 04.15 மணியளவில் சுமார் 37 வயது மதிக்கத்தக்க நடராஜன் என்பவர் தானாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரித்தபோது அடையாளம் தெரியாத ஒரு நபர் ஒப்பனை பிள்ளையார் கோவில் தெருவில் மாலை 03.00 மணியளவில் தன்னை தாக்கியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை நான் பரிசோதித்தபோது, அவருக்கு இடது தலைப்பகுதியில் காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு, பின்பு அவருக்கு சீ.டீ.ஸ்கேன் எடுப்பதற்காக அவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு சீ.டி.பிரைன் எடுக்கப்பட்டது. அதனை பார்த்து அவருடைய காயங்கள் சாதாரண

காயங்கள் எனச்சான்று வழங்கினேன். விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

காயம்பட்டவர் சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். காயம்பட்டவர் என்னிடம் என்ன ஆயுதத்தினால் தாக்கப்பட்டார் என்று கூறவில்லை. காயம்பட்டவர் உடம்பில் இரத்தக்கசிவு இருந்ததாக நான் குறிப்பிடவில்லை. நான் முதல்விசாரணையில் கூறியது போல் தான் போலீசார் என்னை விசாரிக்கும் போதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஒரு நபர் கரடுமுரடான பாதையில் செல்லும் போது தடுக்கி விழுந்தால் இந்தக்காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

(1 வது எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**நீதிமன்ற விசாரணை -**

**கேள்வி** - நீங்கள் கருத்துரு வழங்கும்போது திருநெல்வேலி அரசு மருத்துவமனை சிகிச்சை குறிப்புகளை பார்த்தீர்களா?.

**பதில்** - இல்லை. நான் 2 மாதங்கள் கழித்து போலீசார் எடுத்து வந்த சீ.டீ.பிரைன் அறிக்கையை பார்த்து கருத்துரு வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சீ.டீ.பிரைன் அறிக்கை நகல் தான் நான் பார்த்தது ஆகும். நான் எம்.ஆர்.ஐ ஸ்கேன் அறிக்கையை பார்க்கவில்லை.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:47:24 +0530